DECEMBER 2022 **U/ID 33207/UCT2B/ UCL2A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. பிரமபுரத்தின் பெருமைகள் பற்றி எழுதுக.

2. நாமார்க்கும் குடியல்லோம் பதிகம் எவ்வகை யாப்பில் அமைந்துள்ளது - தருக.

3. திருநாவுக்கரசர் எத்தகையப் பொருளாகச் சிவபெருமானை வருணிக்கிறார்?

4. சிவபெருமானின் இயல்புகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?

5. மாணிக்கவாசகருக்காக இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் யாவை?

6. திருவெம்பாவை குறிப்பு வரைக.

7. குலசேகராழ்வார் பிறப்பும் வளர்ப்பும் குறித்து எழுதுக.

8. கண்ணபிரானின் அழகு நலத்தை எடுத்துரைக்க.

9. சிறிய திருமடலில் தலைவியின் ஒப்பனைகள் குறித்து எழுதுக.

10. குணங்குடியார் கூறிய அறிவுரைகளில் இரண்டினைக் கூறுக.

11. பரம்பொருளை அடைய எதனை ஒழிக்க வேண்டும் என்கிறார் குணங்குடியார்?

12. அடிகளாரின் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. திருஞானசம்பந்தர் சிவபெருமானின் தோற்றம், பக்தியின் சிறப்புக்கள் ஆகியவற்றைத் தொகுத்துரைக்க.

14. சிவபெருமானின் தன்மைகளாக நாவுக்கரசர் கூறுவன யாவை?

15. திருவதிகைத் திருவீரட்டான பதிக வரலாற்றின் சிறப்புக்களைத் தந்து விளக்குக.

16. பாவைப் பாடல்களில் அமைந்துள்ள உரையாடல் பாங்கினை விளக்கியுரைக்க.

17. குலசேகராழ்வார் இராமனின் சிறப்புகளாகக் கூறியவற்றை விளக்குக.

18. சிறிய திருமடலின் துணை கொண்டு வைணவ சமயக் கருத்துக்களைக் கூறுக.

19. தெய்வமணிமாலைப் பாடல்களில் வள்ளலார் கூறும் கருத்துக்கள் யாவை? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. சிவபெருமானின் பெருமைகளைப் பிரமாபுரத்திருத்தலத்தின் வழி எடுத்துரைக்க.

21. சுந்தரர் பாடிய முதற்பதிகப் பாடலின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.

22. அறிவுறுத்தல் வழி மாணிக்கவாசகர் உரையில் இறைபெருமைகளைத் தொகுத்துரைக்க.

23. மன்னுபுகழ் திருமொழிச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

24. வள்ளலார் முருகனின் சிறப்புகளாகக் கூறியவற்றை விரித்துரைக்க.

———————